www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தொடர்பாடல் மாதிரிகளின் மத்தியில், மூலம் பற்றிய ஒரு சிக்கலான விவரிப்புத் தரப்பட்டது
(1) வில்பர் ஷ்ராமினால் (2) சார்ள்ஸ் ஒஸ்கூட்டினால்
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் (4) ஷெனொன் மற்றும் வீவரினால்
(5) டேவிட் கே. பெர்லோவினால்

**2.** மானுடத் தொடர்பாடல் வரலாற்றில் பயன்படுத்தப்பட்ட முதல் இரு தொடர்பாடல் வடிவங்கள் யாவை ?
(1) வாய்மொழி மற்றும் முறைசாராத் தொடர்பாடல்
(2) முறைசார் மற்றும் முறைசாராத் தொடர்பாடல்
(3) செவிப்புல மற்றும் வாய்மொழித் தொடர்பாடல்
(4) காட்சி மற்றும் வாய்மொழி சாராத் தொடர்பாடல்
(5) எழுத்து மற்றும் காட்சித் தொடர்பாடல்

**3.** பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக் கூறாக **அமையாதது** ?
(1) விளைவு (2) இடையூறு (3) பின்னூட்டம் (4) சூழல் (5) மாதிரி

**4.** கரும்பலகையில் கணித ஆசிரியரினால் எழுதப்பட்ட இலக்கங்கள் தெளிவற்றதாக இருந்தமையினால், கமல் தனது அப்பியாசக் கொப்பியிலும் அதனைத் தவறாகப் பிரதி செய்திருந்தார். இதன் காரணமாக, அவரது பதிலும் தவறானதாகவே அமைந்தது. தொடர்பாடல் பற்றிய பகுப்பாய்வில், இது
(1) ஒரு பெறுநரின் தவறு (2) ஓர் இடையூறு
(3) ஒரு தவறான கற்பிதம் (4) கற்பனாவாக்கத்துடன் இணைந்த ஒரு பிரச்சினை
(5) ஒரு தவறான புரிதல்

**5.** ஓர் ஆவணத்தில் பெருந்தொகையான பிரதிகள் தேவைப்படும்போது பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய அச்சிடல் வழிமுறை எது ?
(1) எழுத்து அச்சு (letter press) (2) மறுதோன்றி அல்லது ஓவ்செற்
(3) திரை அச்சு (screen printing) (4) டிஜிட்டல்
(5) ரோட்டரி

**6.** நாளாந்த அடிப்படையில் மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் தொடர்பாடல் வடிவம் எது ?
(1) வாய்மொழி சாராத் தொடர்பாடல் (2) வாய்மொழித் தொடர்பாடல்
(3) செவிப்புலத் தொடர்பாடல் (4) காட்சித் தொடர்பாடல்
(5) முறைசாராத் தொடர்பாடல்

**7.** மொழிப் பயன்பாட்டின் அடிப்படை வகைமை ஒன்றெனக் கருதப்பட **முடியாதது**
(1) செம்மையாக்கல் அல்லது தொகுப்பாக்கம் செய்தல்
(2) பேசுதல்
(3) பகுப்பாய்தல்
(4) ஆற்றுகை
(5) கருத்துப் பரிமாற்றம்

**8.** வாய்மொழி சாராத் தொடர்பாடலின் ஓர் அம்சமாக **அமையாதது,**
(1) அது ஒரு வழிமுறையுடன் வரையறுக்கப்படாதது.
(2) அது உணர்வற்றும் நிகழக்கூடியது.
(3) அது தன்வயமானது.
(4) அது நெறிமுறைகளின்பாற்பட்டது.
(5) அது தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவது.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**9.** ஒரு தொலைபேசிப் பரிவர்த்தனையில் இரண்டு தரப்புகளும் புரிந்துகொள்ளக் கூடியதாகப் பயன்படுத்த முடியுமான வாய்மொழி சாராத் தொடர்பாடல் முறைகளாவன

(1) பேச்சின் வேகம், நிசப்தம், வாசனை, பேச்சின் ஒலிக்கோலம் (ரிதம்)
(2) நிசப்தம், உடல் சைகை, பேச்சின் ஒலிக்கோலம், வெளி
(3) நிசப்தம், பேச்சின் வேகம், பேச்சின் ஒலிக்கோலம், ஒலி நடைகள் (styles of sound)
(4) பேச்சின் வேகம், ஒலி அளவு, வாசனை, பேச்சின் ஒலிக்கோலம்
(5) வெளி, உடல் தோற்றம், குரல், பேச்சின் ஒலிக்கோலம்

**10.** ஒரு வட்டாரமொழி (துணைமொழி) ஆனது,

(1) தரநிர்ணயங்களை மீறுவதொன்று என விபரிக்கப்படலாம்.
(2) மொழிப் பயன்பாட்டின் இயற்கையை மீறிய நிகழ்வொன்று என விபரிக்கப்படலாம்.
(3) தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதொன்று என விபரிக்கப்படலாம்.
(4) பிரதான மொழியிலிருந்து விலகியிருப்பதொன்று என விபரிக்கப்படலாம்.
(5) வெகுசன ஊடகங்களுக்கு முக்கியமான ஒரு மொழிநடை என விபரிக்கப்படலாம்.

**11.** தற்கால பூகோளமயமாக்கம் பற்றிய கருத்தியல்

(1) மார்க்சிசம் (2) தேசியவாதம் (3) தாராண்மைவாதம்
(4) பாசிசம் (5) ஜனநாயகம்

**12.** வாய்மொழிசாராத் தொடர்பாடலை கலைத்துவத்துடனும் விளைவுகளைத் தரக்கூடியதுமான முறையில் பயன்படுத்தும் ஊடகம்

(1) வானொலி ஆகும். (2) தொலைக்காட்சி ஆகும். (3) சினிமா ஆகும்.
(4) இணையம் ஆகும். (5) புதிய ஊடகம் ஆகும்.

**13.** ஊடகங்கள் நேரடியாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட முடியுமாவது,

(1) வெகுசன ஊடகங்களுக்கான ஒழுக்கநெறிகளால் ஆகும்.
(2) மரபார்ந்த வழிமுறைகளால் ஆகும்.
(3) சுதந்திரமான சிந்தனையால் ஆகும்.
(4) சட்ட வழிமுறைகளால் ஆகும்.
(5) ஊடக இணக்கப்பாடுகளால் ஆகும்.

**14.** அபிவிருத்தியில், ஒரு தேசத்தின் எதிர்பார்ப்புக்களை உயர்ச்சியடையச் செய்வதற்கு வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்த முடியும். இது பிரேரிக்கப்பட்டது

(1) வில்பர் ஷ்ராமினால். (2) டட்லே சீஸினால்.
(3) போல் பி. ஸ்ரீவனினால். (4) விமல் திசநாயக்கவினால்.
(5) எவரெட் எம். ரோஜர்ஸினால்.

**15.** ஒரு சமூகத்தில், பிரசித்த பண்பாட்டுக்கும் நுகர்வுத்தன்மைக்குமான மனப்போக்கிற்கு அதிகம் பங்களிப்புச் செய்யும் ஊடகம்

(1) வானொலி (2) அச்சு ஊடகம் (3) இணையம்
(4) தொலைக்காட்சி (5) சமூக ஊடகங்கள்

**16.** தாராண்மைவாதத்தின் அடிப்படைக் கட்டுமானம்

(1) சமூக வர்க்கங்களுக்கிடையிலான ஒருமைப்பாடு ஆகும்.
(2) தனியாட்களின் சுதந்திரம் ஆகும்.
(3) குடிசார் உரிமைகள் (civic rights) ஆகும்.
(4) இன நல்லுறவு ஆகும்.
(5) தேசிய மீளிணக்கம் ஆகும்.

**17.** வெகுசன ஊடகங்களின் பெறுநர்கள்

(1) செயற்படுநராயிருப்பர். (2) வேறுபட்ட பண்பினராயிருப்பர். (3) ஒருமித்திருப்பர்.
(4) ஒரேவகைப் பண்பினராயிருப்பர். (5) மாறாத்தன்மையினராயிருப்பர்.

**18.** வெகுசனத் தொடர்பாடற் செயன்முறையில் **காணக்கிடைக்காத** அம்சம்

(1) முறைசார் நிறுவனங்களின் இருப்பு
(2) தொழினுட்ப உபகரணங்களின் மிகுதியான பயன்பாடு
(3) பல வாயிற்காப்பாளர்களின் தலையீடு
(4) தொடர்பாடுபவருக்கும் பெறுநருக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு
(5) வணிக அடிப்படையிலான இலாப நோக்கு

**19.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

அபிவிருத்தித் தொடர்பாடலானது அதிகமான சந்தர்ப்பங்களில்

(1) ஊடகச் சேர்மையினைப் (media -mix) பயன்படுத்துகிறது.
(2) ஒரு சமூக சந்தைப்படுத்தும் செய்தியாகும்.
(3) வர்த்தக இலக்குகளை உள்ளடக்கியிருக்கிறது.
(4) சமுதாயம் பெறும் ஆதாயங்களை இலக்குக் கொள்கிறது.
(5) நிலையான செய்திகளால் உருவாக்கம் பெறுகிறது.

[பக். 3 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**20.** கருத்துருவாக்கற் தலைமை பற்றிய இருபடி நிலைகள் கோட்பாட்டை அறிமுகப்படுத்திய ஆய்வாளர்
(1) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் (2) போல் லாசர்ஃபெல்ட்
(3) கேர்ட் லெவின் (4) வில்பர் ஷ்ராம்
(5) டானியல் லேர்னர்


**21.** வெகுசன ஊடகப் பயன்பாட்டில், குறைந்த செயற்படுதன்மை கொண்ட இணையர்
(1) செய்திப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் (2) வானொலியும் தொலைக்காட்சியும்
(3) சினிமாவும் புதிய ஊடகமும் (4) செய்திப்பத்திரிகைகளும் வானொலியும்
(5) சினிமாவும் தொலைக்காட்சியும்

**22.** அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு ஸ்தாபிக்கப்பட்டது
(1) தொழினுட்பப் புரட்சியின் ஆரம்பத்திற்குப் பின்னர்
(2) முதலாம் உலகப்போரின் பின்னர்
(3) இரண்டாம் உலகப்போரின் பின்னர்
(4) பனிப்போர் முடிவிற்குப் பின்னர்
(5) பூகோளமயமாக்கல் செயன்முறையின் ஆரம்பத்துடன்

**23.** தொடர்பாடலில், தனது நிலையிலிருந்து மாத்திரம் மட்டுப்படுத்தியிராமல், சிலவற்றை வேறு சிலரின் பார்வையிலிருந்தும் நோக்கும் செயற்பாடு அறியப்படுவது
(1) பார்வை நோக்கு என. (2) சுய எண்ணக்கரு என.
(3) மேலாதிக்க எண்ணக்கரு (hegemony) என. (4) ஆழ்பரிவு என.
(5) சம்பாஷணை என.

**24.** வெகுசன ஊடகங்களினால் கவனத்திற் கொள்ளப்படாவிட்டாலும், உள்ளூர் சம்பந்தமான பிரச்சினை ஒன்று சமூக ஊடகங்களில் கலந்துரையாடப்பட்டது. இது பெரும்பாலும்
(1) புதிய ஊடகவியலின் பேறாக அமையலாம்.
(2) அபிவிருத்தி ஊடகவியலின் பேறாக அமையலாம்.
(3) புலனாய்வு ஊடகங்களின் பேறாக அமையலாம்.
(4) இலத்திரனியல் ஊடகவியலின் பேறாக அமையலாம்.
(5) பிரஜைகள் ஊடகவியலின் பேறாக அமையலாம்.

● **25** முதல் **28** வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது கீழ்வரும் மாதிரியைத் தொடர்பாடலின் கணித மாதிரியாகக் கருத்திற்கொள்க.




**25.** P மூலமாகக் கருதப்பட முடியுமானால், 'பெறப்பட்ட சமிக்ஞையாக' அவசியம் அமைய வேண்டியது
(1) Q (2) R (3) S
(4) T (5) பெயரிடப்படாத வட்டம்

**26.** புகைப்படப் பிரதியெடுக்கும் கருவியின் தொழினுட்பக் கோளாறினால், பெறப்பட்ட பிரதியானது வாசிப்பதற்குக் கடினமானதாக அமைந்தது. மேற்குறித்த மாதிரியில் இதனைப் பிரதிநிதித்துவம் செய்வது
(1) P (2) Q (3) R (4) S (5) T

**27.** தொடர்பாடற் சந்தர்ப்பமொன்றில் குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பு பொதுவாக நிகழ்வதாக எதிர்பார்க்கப்படும் படிநிலைகள்
(1) P மற்றும் Q ஆகும். (2) Q மற்றும் T ஆகும்.
(3) T மற்றும் R ஆகும். (4) Q மற்றும் R ஆகும்.
(5) R மற்றும் S ஆகும்.

**28.** செலுத்து திசையைக் கருத்திற் கொள்ளும்போது, மேற்படி மாதிரியானது,
(1) லாஸ்வெல் மாதிரியை ஒத்திருக்கிறது, பெர்லோவினதை அல்ல.
(2) பெர்லோவின் மாதிரியை ஒத்திருக்கிறது, லாஸ்வெல்லினதை அல்ல.
(3) லாஸ்வெல் மற்றும் பெர்லோவின் மாதிரிகளை ஒத்திருக்கிறது, ஷ்ராம் - ஒஸ்கூட்டினதை அல்ல.
(4) லாஸ்வெல், பெர்லோ மற்றும் ஷ்ராம்-ஒஸ்கூட் மாதிரிகளை ஒத்திருக்கிறது.
(5) லாஸ்வெல், பெர்லோ மற்றும் ஷ்ராம்-ஒஸ்கூட் ஆகிய எம்மாதிரிகளையும் ஒத்திருக்கவில்லை.

agaram.lk
[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



01961

Agaram.LK - Keep your dreams alive!

**29.** ஊடக விளங்கறிவு பற்றிய விவாதமொன்றில், அது பற்றி உள்ளடக்கப்பட்டிருந்த வாதங்களின் அடிப்படையில், ஊடக விளங்கறிவானது

A - ஊடகக் கல்வியறிவின் ஒரு பகுதியெனக் கருதப்பட முடியும்.
B - ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்குடனான ஒரு செயற்பாடு எனக் கருதப்பட முடியும்.
C - பெறுநரது செயற்பாடு தொடர்பானது எனக் கருதப்பட முடியும்.
D - ஊடகங்களைப் பயன்படுத்துவதிலுள்ள ஒரு திறனாற்றல் எனக் கருதப்பட முடியும்.

இந்தத் தரவுகளில்
(1) A யும் B யும் சரியானவை, ஆனால் C யும் D யும் தவறானவை
(2) A யும் D யும் சரியானவை, ஆனால் B யும் C யும் தவறானவை
(3) A யும் C யும் சரியானவை, ஆனால் B யும் D யும் தவறானவை
(4) B யும் C யும் சரியானவை, ஆனால் A யும் D யும் தவறானவை
(5) B யும் D யும் சரியானவை, ஆனால் A யும் C யும் தவறானவை

**30.** பொதுமக்கள் தொடர்புகளுடன் (public relations) **இணைந்திராத** ஒரு பண்பம்சம்
(1) பொதுமக்கள் மத்தியில் நல்லெண்ணத்தைத் தக்கவைப்பது.
(2) சமூக ஏற்புடைமையைப் பெறுவதற்கான ஒரு தந்திரோபாயத் தொடர்பாடல்.
(3) வணிக அடிப்படையிலான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைக் கடந்து நிற்பது.
(4) விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளிலிருந்து வேறுபட்டது.
(5) துரித ஆதாயங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு குறுகிய காலச் செயன்முறை.

**31.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வாய்மொழித் தொடர்பாடல் வாய்மொழி சாராத் தொடர்பாடலின் சில அம்சங்களை உள்ளடக்கியிருக்க முடியும்.
(2) பகுப்பாய்வுக்கு மொழி மாத்திரம் போதுமானது அல்ல.
(3) உயிர்வாழும் மொழியின் பொதுவான அம்சமாக இருப்பது, அதன் தொடர்ச்சியான பயன்பாடு.
(4) குழந்தைப் பராயத்திற்கு மாத்திரமே மொழி உள்வாங்கப்படுதல் வரையறுக்கப்படுகிறது.
(5) ஆற்றுகை நிச்சயமாகவே தன்வயமான ஒன்றாகும்.

**32.** கீழே தரப்படுவன, படைப்பாக்கப் பணி தொடர்பான சில தரவுகளாகும்.

A - தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
B - கல்வியறிவு தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல்
C - செய்தியின் ஆழமற்ற, மேலெழுந்தவாரியான அர்த்தம்
D - வேறுபட்ட நுட்பங்கள் தொடர்பான அறிவு

இவற்றில், 'படைப்பாக்க வாசிப்பு' என்பது இணைந்திருப்பது
(1) A மற்றும் B யுடன் மாத்திரம்
(2) B மற்றும் C யுடன் மாத்திரம்
(3) C மற்றும் D யுடன் மாத்திரம்
(4) A, B மற்றும் C யுடன் மாத்திரம்
(5) A, B மற்றும் D யுடன் மாத்திரம்

**33.** பழமொழிகள் தொடர்பான மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அவை சிந்தனைகளைச் சுருக்கமாகவும் வினைத்திறனுடனும் வெளிப்படுத்தப் பயன்படக்கூடியன.
(2) அவை அன்றாடத் தொடர்பாடலில் பயன்படுத்தக் கடினமானவை.
(3) அவை மனித அறிவுக்குப் புலப்படாத, கண்ணுக்குத் தெரியாத சக்திகள் தொடர்பாக உருவாக்கப்பட்டவை.
(4) அவை நாட்டார் கதைகளுடன் எவ்வழியிலும் தொடர்பில்லாதவை.
(5) அவை புதிய சமூக நிகழ்வுகள் தொடர்பான சூழலில் உருவாக்கப்படவில்லை.

**34.** ஊடக விமர்சகர் ஒருவரின் வகிபங்கு தொடர்பில், வகுப்பறையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

நிமலன் :- ஊடகத் தொழிலின் தன்மை பற்றிய புரிந்துணர்வை விமர்சகர் அவசியம் கொண்டிருக்க வேண்டும்.
கமலன் :- பொதுவான பெறுநரோடு ஒப்பிடுகையில், அவர் பகுப்பாய்வுத் திறன்களை அதிகம் கொண்டிருக்க வேண்டும்.
விமலன் :- அத்தோடு, விமர்சகர் சிதைவடையச் செய்யும் விமர்சனத்தை வழங்குபவராவார்.
ராமன் :- தொழிற்துறையின் தடைகளற்ற இயக்கத்திற்கு அவர் பங்களிப்புச் செய்வது அவசியமற்றது. ஆனால், ஊடக உள்ளடக்கம் தொடர்பில் அவர் கவனம் செலுத்த வேண்டும்.

மேலுள்ளவாறு முன்வைக்கப்பட்ட கருத்துகளில், ஊடக விமர்சகரின் வகிபங்கினைச் சிறப்பாக விபரித்தவர்கள்
(1) நிமலன் மற்றும் கமலன்
(2) நிமலன் மற்றும் விமலன்
(3) நிமலன், விமலன் மற்றும் ராமன்
(4) கமலன், விமலன் மற்றும் ராமன்
(5) நிமலன், கமலன் மற்றும் ராமன்

**35.** 'பொதுமக்கள் தொடர்புகள் என்றால் என்ன ?' என்ற தலைப்பிலான விரிவுரையில் உள்ளடக்கப்பட குறைந்த இயலுமையைக் கொண்டிருக்கும் கூற்று
(1) அது எவரொருவரினதும் நற்பெயரில் கவனம் செலுத்துவது.
(2) அது அபிப்பிராயங்கள் உருவாக்கத்துடன் தொடர்புடையது.
(3) அது ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையில் நிகழ்த்தப்பெறுவது.
(4) அது நல்லெண்ணத்தைப் பாதுகாப்பதுடன் தொடர்புடையது.
(5) அது குறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் நிகழ்த்தப்பெறுவது.

[பக். 5 ஐப் பார்க்க

agaram.lk

www.agaram.lk



**36.** அபிவிருத்தித் தொடர்பாடல் வழிமுறைகள் பற்றித் தீர்மானிப்பதில் கவனத்திற் கொள்வதற்காகப் பிரேரிக்கப்பட்டுள்ள சில கருத்துகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - அவை புதிய தொழினுட்ப அபிவிருத்தியுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படக் கூடியன.
B - உரிய விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டோரினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவது அவசியமானது.
C - அவை பாரம்பரிய தொடர்பாடல் வழிமுறைகளுடன் இணையும் வழிகளைக் கண்டறிவது சிறப்பானது.
D - அவை இலக்கு வைக்கப்பட்ட சமூகத்திற்கு மாத்திரமான, திட்டமிடப்பட்ட தொடர்பாடல் வழிமுறைகளாக அமைவது அவசியமானது.
E - பலன்தரக்கூடியவாறு மொழியைப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பான விழிப்புணர்வு கட்டாயமானது.

இவற்றுள், உண்மையான கூற்றுகள்
(1) A, B, D மற்றும் E மாத்திரம்
(2) A, B, C மற்றும் D மாத்திரம்
(3) A, C, D மற்றும் E மாத்திரம்
(4) B, C, D மற்றும் E மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய யாவும்

**37.** அபிவிருத்தியில் பொதுமக்கள் தொடர்பிலான நான்கு அம்சங்களை சீனக் குடியரசின் முன்னாள் தலைவரான மாவோ சேதுங் அறிமுகப்படுத்தினார். சரியாக அந்த அம்சங்களைக் கொண்டிருக்கும் தெரிவைத் தெரிவுசெய்க.
(1) அறியும் ஆற்றல், சமூகத்தின் பங்களிப்பு, நகரமயமாக்கம், எண்ணளவாக்கம்
(2) தொகுப்பாக்கம், தொழிற்துறையாக்கம், நம்பகத்தன்மை, நடைமுறையாக்கம்
(3) எண்ணளவாக்கம், நகரமயமாக்கம், தொழிற்துறையாக்கம், நவீனமயமாக்கம்
(4) அறியும் ஆற்றல், தொகுப்பாக்கம், எண்ணளவாக்கம், நடைமுறையாக்கம்
(5) தொழிற்துறையாக்கம், நகரமயமாக்கம், நவீனமயமாக்கம், மேற்கத்தேயமயமாக்கம்

**38.** சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கீழைத்தேய நாடுகளில் ஆதாரமற்ற பல நம்பிக்கைகள் காணப்படவில்லை.
(2) ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, மாந்திரீகச் சக்திகளை வரவழைப்பதாகக் கூறப்படுவது முதலாக வேறுபட்ட வடிவங்களிலான மந்திர தந்திரங்கள் நிகழ்த்தப்படுகின்றன.
(3) சோதிடவியல், நாட்டார் மருத்துவத்துடன் தொடர்புடையது.
(4) பழமொழிகள், நாட்டார் கதைகளுடன் எப்போதும் தொடர்புபட்டனவல்ல.
(5) தொன்ம மூலங்களிலிருந்து மாத்திரமே நாட்டார் கதைகள் உருவாக்கம் பெறுகின்றன.

**39.** பிரசித்தமான பண்பாட்டில், வெகுசன ஊடகங்கள் பெரும்பாலும் பிரதானப்படுத்துவது
(1) வணிக ஆதாயங்களை முன்நிறுத்துவதன் ஊடாக, பொதுவான பார்வையாளர்களைக் கவரும் செய்திகளை ஆகும்.
(2) பெரும்பான்மையோரின் பண்பாட்டினைப் பிரதிநிதித்துவம் செய்யும் செய்திகளை ஆகும்.
(3) பெறுநரின் அறிவை முன்னேற்றும் செய்திகளை ஆகும்.
(4) பெறுநர்களின் கேள்விகளுக்கு (demand) இசைவான உள்ளடக்கத்துடனான செய்திகளை ஆகும்.
(5) சமூகத்தின் பிரசித்த பண்பாட்டின் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட செய்திகளை ஆகும்.

**40.** அவை தரக்கூடிய அடிப்படையான எண்ணக்கருக்களின் பேரில், ஓர் எதிரிடையை அவதானிக்கக்கூடியதாக அமைவது
(1) அதிகார ஆதிக்கம் மற்றும் கம்யூனிசக் கோட்பாடுகளுக்கிடையே ஆகும்.
(2) தாராண்மைவாத மற்றும் மேற்கத்தேயக் கோட்பாடுகளுக்கிடையே ஆகும்.
(3) அதிகார ஆதிக்கம் மற்றும் தாராண்மைவாதக் கோட்பாடுகளுக்கிடையே ஆகும்.
(4) கம்யூனிச மற்றும் புரட்சிவாதக் கோட்பாடுகளுக்கிடையே ஆகும்.
(5) ஜனநாயக மற்றும் அபிவிருத்திக் கோட்பாடுகளுக்கிடையே ஆகும்.

**41.** வணிக வர்த்தகமொன்றில் இடம்பெறும் பொதுமக்கள் தொடர்பு பற்றிய திட்டத்தில், 'பொதுமக்கள்' பற்றித் தீர்மானித்தல் மிக முக்கியமானது. பொதுமக்கள் என்பது உள்ளடக்கும் பரப்பு பற்றிய **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பொதுவான மக்களை அது அவசியம் உள்ளடக்க வேண்டும்.
(2) ஆலோசகர்கள், சேவை வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் முதலீட்டாளர்களை அது அவசியம் உள்ளடக்க வேண்டும்.
(3) வர்த்தகத்தின் பணியாளர்களையும் நுகர்வோரையும் அது அவசியம் உள்ளடக்க வேண்டும்.
(4) பொதுமக்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட குழுவை மாத்திரம் அது அவசியம் உள்ளடக்க வேண்டும்.
(5) வர்த்தகத்திற்கு வர்த்தகம் உள்ளடக்கப்படும் குழுக்கள் வேறுபட்டிருக்க முடியும்.

**42.** தற்போது நடைமுறையில் இருக்கும், தகவல்களைப் பெறுவதற்கான உரிமைச் சட்டம் பயன்படுத்தப்படக்கூடியதாக இருப்பது
(1) ஊடகவியலாளர்கள் மாத்திரம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(2) அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(3) அரசினதும் அது தொடர்புடைய நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகும்.
(4) 10 வருடங்களுக்கு முன்னராக பரிமாற்றப்பட்ட அரசு தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காகும்.
(5) அரச துறையிலிருந்து எந்தத் தகவலையும் உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்காகும்.

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**43.** மேதினப் பேரணிகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட அரச ஊடக மற்றும் தனியார் ஊடக அறிக்கையிடல்கள் தொடர்பில் வேறுபாடுகள் பலவற்றைக் காண முடிகிறது. இதனைச் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கியமாவது
(1) ஊடக உரிமையாண்மை பற்றிய பகுப்பாய்வுடனான புரிந்துணர்வு
(2) ஊடக அறிக்கையிடல் மீதான இற்றைப்படுத்தப்பட்ட அறிவு
(3) ஊடக அரசியல்கள் தொடர்பான ஒரு யதார்த்தமான பார்வை
(4) ஊடக விளங்கறிவு மீதான செயன்முறைத் திறன்கள்
(5) ஊடக சுயாதீனம் மீதான கோட்பாட்டு அறிவு

**44.** நாவலாசிரியர் ஒருவரால் வழங்கப்பட்ட கதாபாத்திரங்களுக்கிடையிலான பின்னணியின் ஓர் உணர்வுரீதியான விவரிப்பினை, விபரமாகத் தரக்கூடிய செயற்பாடு
(1) அறிக்கையிடல் (2) ஆற்றுகை (3) பகுப்பாய்வு
(4) பேச்சு (5) திறனாய்வு

**45.** தற்போதைய ஊடகப் பண்பாட்டில் விருத்தியடைந்திருக்கும் ஊடகக் குவிவுப் (media convergence) போக்கிற்குக் காரணமாவது
(1) ஊடக அலைவரிசைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு
(2) தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதில் பெறுநர்கள் கொண்டிருக்கும் ஆற்றலின் அதிகரிப்பு
(3) இணையத்தின் பரவலாக்கம்
(4) தொடர்பாடலில் காட்சிவழிப் போக்கின் அதிகரிப்பு
(5) பூகோளமயமாக்கத்தின் அதிகமான பாதிப்பு

**46.** விமல் தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றதால் தனது நாளாந்த வாழ்வுப் போக்கிலிருந்து விலகிச் செல்ல நேர்ந்தது. அத்தோடு, வாழ்வில் எதிர்பார்த்திராத மாற்றங்கள் வேறு அவரை மனதளவில் பலவீனமடையச் செய்தன. இது
(1) பதகளிப்பின் (tension) குறியீடு (2) மன அழுத்தத்தின் (stress) குறியீடு
(3) மனக்கவலையின் (anxiety) குறியீடு (4) மனச்சோர்வின் (depression) குறியீடு
(5) துருவமயமாதலின் (polarization) குறியீடு

**47.** இலங்கையில் ஐரோப்பியத் திரைப்பட விழாவை நடத்துவதற்கு ஐரோப்பிய யூனியன் முடிவுசெய்தது. இது
(1) ஒரு பண்பாட்டு ஆக்கிரமிப்பு (2) ஒரு புதிய காலனியாதிக்கத் தந்திரோபாயம்
(3) வணிக நோக்கங்களுடனான செயற்பாடு (4) ஒரு பண்பாட்டுக் கூட்டுறவு
(5) உள்ளூர் சினிமாவை வளப்படுத்தும் முயற்சி

**48.** எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது, வெகுசன ஊடக நிறுவனங்கள் அத்தியாவசியப் பொருட்களைச் சேகரிப்பதற்கும் அவற்றைப் பாதிக்கப்பட்டோர் மத்தியில் விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. ஊடக நிறுவனத்தின் பார்வையில் இது
(1) வெகுசன ஊடகத்தின் முதனிலைப் பணி (2) அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடு
(3) சமூக சேவை (4) பொதுமக்கள் தொடர்புகளுக்கான சந்தர்ப்பம்
(5) சமூகப் பொறுப்புணர்வை ஊடகம் நிறைவேற்றுதல்

**49.** X என்னும் வங்கியில், பொதுமக்கள் தொடர்பு அலுவலராக நியமனம் பெற்றுக்கொண்ட ரஞ்சனி, வங்கிக்கும் அங்கு கணக்கு வைத்திருப்பவர்களுக்குமான உறவை அதிகரிக்க, ஒரு தொகை தந்திரோபாயங்களைப் பிரேரித்திருந்தார். அவற்றில், மிகப் பொருத்தமாக அமைவன
(1) விளம்பரங்கள், கண்காட்சிகள், ஆண்டறிக்கைகள் மற்றும் செய்தி மடல்கள்
(2) நன்றி தெரிவிக்கும் கடிதங்கள், கையேடுகள், போட்டிகளை ஒழுங்கமைத்தலும் பரிசுகளை வழங்குதலும்
(3) துண்டுப் பிரசுரங்கள், அனுசரணைகள், பணிப் பயிற்சிகள் மற்றும் ஊடக அறிவித்தல்கள்
(4) ஊடகத் தொடர்புகள், பத்தி எழுத்துகள், கையேடுகள் மற்றும் நன்றி தெரிவிக்கும் கடிதங்கள்
(5) ஊடக மாநாடுகள், ஊடக அறிவித்தல்கள், செய்தி மடல்கள் மற்றும் போட்டிகளை ஒழுங்கமைத்தல்

**50.** தொலைக்காட்சி விளம்பரங்கள் மீதான கலந்துரையாடலொன்று பாடசாலை ஊடக வட்டத்தில் இடம்பெற்றது.

ஜெயந்தி :- நுகர்வோர் எவ்வாறு பொருட்களை நுகர்கின்றனர் என்பதை விளம்பரங்கள் மாற்றத்திற்குள்ளாக்க முடியும்.

நயனி :- விளம்பரங்கள் இல்லாது வெகுசன ஊடகங்கள் உயிர்வாழ முடியாது.

ருவனி :- நம்பிக்கைத் தன்மையுடன் பொருட்களைக் கொள்வனவு செய்ய விளம்பரங்கள் உதவுகின்றன.

காமினி :- விளம்பரங்களை சரியாகப் புரிந்துகொள்வதற்கு, ஒருவர் ஊடக விளங்கறிவைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலே தரப்பட்ட பார்வைகளிலிருந்து விளம்பரங்கள் பற்றிய சரியான கூற்றுகளைத் தந்தவர்கள்
(1) ஜெயந்தி மற்றும் ருவனி மாத்திரம் (2) ஜெயந்தி, நயனி மற்றும் ருவனி மாத்திரம்
(3) நயனி, ருவனி மற்றும் காமினி மாத்திரம் (4) ஜெயந்தி, நயனி மற்றும் காமினி மாத்திரம்
(5) ஜெயந்தி, நயனி, ருவனி, காமினி ஆகிய யாவரும்

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



AL/2017/29/T-II

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II<br>Communication & Media Studies II | 29 T II | மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள்:**

✳ **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** மானுட உயிர்வாழ்விற்கு தொடர்பாடல் அவசியமான ஓர் அம்சமாகும்.

(i) குளோட் ஷனொன் மற்றும் வோரன் வீவரின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தைத் தருக.

(ii) தொடர்பாடலின் அடிப்படைப் பணிகள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

(iii) தொடர்பாடலின் **நான்கு** எண்ணக்கருக்களைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டு** பற்றிச் சுருக்கமான விவரிப்புகள் தருக.

(iv) நீங்கள் தெரிவுசெய்த வெகுசன ஊடகமொன்றின் வழியே தொடர்பாடல் செயன்முறையின் **நான்கு** அடிப்படைக் கூறுகளைப் பரிசீலிக்குக.

**2.** இயற்கைப் பேரிடர் நேரங்களில், வெகுசன ஊடகங்கள் வழங்கமுடியுமான சேவை அளப்பரியது.

(i) வெகுசன ஊடகங்களின் **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(ii) பிரசைகள் ஊடகவியலின் **இரண்டு** விசேட இயல்புகளை எடுத்துக்கூறி, அவை இயற்கைப் பேரிடர் சூழல்களில் எவ்விதம் பயன்படுத்தப்பட முடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(iii) டெங்கு பற்றி பொதுமக்களிடம் கல்வியூட்டுவதற்கான வீதி நாடகம் ஒன்றில், நாட்டாரியலின் (folklore) **மூன்று** வெவ்வேறு விடயங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(iv) அபிவிருத்தித் திட்டமொன்றுக்கான தகவல் திரட்டலில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வழிமுறைகளையும், சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும்போது அவசியம் பின்பற்றப்பட வேண்டிய **இரண்டு** நெறிமுறைகளையும் விவரிக்குக.

**3.** 'ஊர்வம்பு' அல்லது 'வதந்தி' (gossip) என்பது தொடர்பாடல் களத்தில் சுவாரஸ்யமாக உணரக்கூடிய ஒன்றாகும். சில சமயங்களில் இது முறைசாராத் தொடர்பாடலின் கீழ் கலந்துரையாடப்பட்டாலும், முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஓர் அம்சமாகவும் இது கவனத்திற் கொள்ளப்பட முடியும்.

(i) முறைசாராத் தொடர்பாடலுடன் தொடர்புடைய 'ஊர்வம்பு' அல்லது 'வதந்தி' சங்கிலியை வரைபடம் ஒன்றில் காட்டுக.

(ii) முறைசார் மற்றும் முறைசாராத் தொடர்பாடல்களுக்கு இடையிலான **இரண்டு** வேறுபாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) ஊர்வம்பு அல்லது வதந்திகள் எவ்வாறு **மூன்று** வழிகளில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதற்குக் காரணங்கள் ஆகலாம் என்பதை விளக்குக.

(iv) ஊர்வம்பு அல்லது வதந்திகள் மூலம் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்வதில் பொதுவாக நிகழ்த்தப்படக் கூடிய **நான்கு** செயற்பாடுகளையும் விவரிக்குக.

**4.** "மொழிக்கும் தொடர்பாடலுக்கும் இடையிலான உறவு வேறுபிரித்திட முடியாதது. பேச்சில், எழுதுவதில் மற்றும் வெகுசன ஊடகப் பயன்பாட்டில் மொழி முக்கியமான வகிபங்கை ஆற்றுகிறது."

(i) 'மொழியை உள்வாங்குதல்' என்பதால் அர்த்தப்படுவது என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(ii) புதிய ஊடகங்களில் மொழியைப் பயன்படுத்தும் முறையில் காணக்கிடைக்கக் கூடிய **இரண்டு** விசேட இயல்புகளை விவரிக்குக.

(iii) வானொலிச் செய்தி அறிக்கையிடலில் மொழியைப் பயன்படுத்தும்போது காணக்கிடைக்கக் கூடிய விசேட இயல்புகள் **மூன்றை** விளக்குக.

(iv) மொழிப் பயன்பாட்டின் **நான்கு** வகைகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் விவரிக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**5.** (i) கூட்டு அல்லது குழுத் தொடர்பாடலின் **நான்கு** விசேட இயல்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடக மாநாடு ஒன்றை ஒழுங்கமைக்கும்போது அவசியம் பின்பற்ற வேண்டிய **நான்கு** படிநிலைகளை எடுத்துக்கூறி, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(iii) வைத்தியசாலை வளாகமொன்றைப் பொதுமக்களின் மனதிற்கிசைவானதோர் இடமாக மாற்றுவதற்குப் பயன்படுத்தத்தக்க **மூன்று** வழிமுறைகளை விவரிக்குக.

(iv) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள மக்கள், அபிவிருத்தி தொடர்பில் கொண்டிருக்கும் நடத்தைசார் பிரச்சினைகள் **நான்கினை** விவரிக்குக.

**6.** வெகுசன ஊடகத் தொழிற்துறையை அரசியல் மற்றும் வர்த்தகக் குழுக்கள் கையாளல் செய்கின்றன.

(i) வெகுசன ஊடக விரிவாக்கத்துடன் உருவாக்கப்பட்ட உலகினைக் குறிப்பிட்டுச் சொல்லும் எண்ணக்கருவினைப் பெயரிடுக.

(ii) விளம்பரங்கள், பண்பாட்டினைப் பாதிக்கும் **இரண்டு** வழிகளை விவரிக்குக.

(iii) ஒரு நபரின் நாளாந்த நிகழ்ச்சி நிரலை வெகுசன ஊடகங்கள் எவ்விதம் நிர்ணயிக்கின்றன என்பதை **மூன்று** வெவ்வேறு விடயங்களைப் பயன்படுத்தி விவரிக்குக.

(iv) திறனாய்வு (அல்லது விமர்சனம்) மீதான வரலாற்று மற்றும் அரசியல் அணுகுமுறைகள் (அல்லது பிரவேசங்கள்) **இரண்டைப்** பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி விவரிக்குக.

**7.** ஊடகப் பண்பாட்டின் இயல்புகளைச் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கு ஊடக விளங்கறிவு பயன்தரக் கூடியது.

(i) 'பண்பாடு' குறித்த எட்வேர்ட் ரெயிலரின் வரைவிலக்கணம் உள்ளடக்கும் **நான்கு** விடயங்களைப் பெயரிடுக.

(ii) ஊடகவழிக் கல்வி பெறலை அடிப்படையாகக் கொண்ட, 'செயற்பாட்டுச் செய்திகள்' (operational messages) மற்றும் 'பராமரிப்புச் செய்திகள்' (maintenance messages) ஆகியவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) வெகுசன ஊடகங்களுடன் இணைந்ததாக, பிரசித்தமான பண்பாட்டின் **மூன்று** அடிப்படை அம்சங்களை விவரிக்குக.

(iv) ஊடக விளங்கறிவுடன் இணைந்த **நான்கு** திறன்களை, ஒவ்வொன்றையும் தனித்தனியாக விவரிக்குக.

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk